மூன்றாவது தேர்ச்சி : இறைகட்டளைகளைப் பின்பற்றுவதன் வழியாக மனித உறவுகளை வளர்த்துக் கொள்வர்

16

## 3.4. உள்ளத்தூய்மையில் மிளிரும் மனித மாண்பு

தி.ப. 5:1-10 பகுதி நாடகம்
(பாத்திரங்கள் பேதுரு, அனனியா, சப்பிரா, வேறு நால்வர்)

அனனியா : சப்பிரா! (வந்து கொண்டே மனைவி சப்பிராவை அழைத்தல்)

சப்பிரா : ஓம் இங்கைதான் இருக்கிறன் என்ன எல்லாஞ் சரியா?

அனனியா : ஓம் ஓம் எல்லாஞ்சரி (அவர் பணப்பையை கொடுத்தல்)

சப்பிரா : காணி பூமி எல்லாத்தையும் வித்து கொடுத்திட்டு நம்மட கடைசி காலத்தில் என்ன செய்வது? நமக்கும் கடைசிக் காலத்துக்கு எல்லாம் தேவைதானே.

அனனியா : ஓ! அதை நான் சொன்னன் தானே. கொஞ்சத்தை எடுத்துப்போட்டு இவ்வளவுக்குத் தான் வித்ததெண்டு மிச்சத்தைக் கொடுப்போம்.

சப்பிரா : சரி அப்படியே செய்யுங்க.

அனனியா : நான் முன்னால் போறன் என்ன!
சப்பிரா : ஓம் ஓம் நான் வேலை எல்லாம் முடிச்சிட்டு வாறன். (மேலறையில் திருத்தூதர் கூடியிருக்கையில் அனனியா நுழைந்துகொண்டே)

அனனியா : சமாதானம் உங்களோடு இருப்பதாக.
பேதுரு : ஆ ............ அனனியாவா, வாங்க வாங்க.

அனனியா : ஐயா! நாங்கள் சொன்னது போல எங்களிட்டை இருக்கிறதெல்லாம் வித்து கொண்டு வந்திருக்கிறன். பொதுத்தேவைக்கு வைச்சுக்கொள்ளுங்கள்.

பேதுரு : நல்லது அனனியா, நீ வித்த காசு முழுக்கக் கொண்டரேல்லத் தானே.


இலவச விநியோகத்திற்காக

;

அனனியா : இல்லையய்யா இவ்வளவுக்குத்தான் வித்தோம்.

பேதுரு : நீ என்னை ஏமாத்தேல்ல; கடவுளையே ஏமாத்துராய், கடவுளே பார்த்துக்கொள்ளுவார்.

அனனியா : ஐயா என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கள்.

இந்நாடகத்தை பார்க்கும் போது உமக்கு ஏற்படும் உணர்வுகள், சிந்தனைகள் எவை? எமது சொல், செயல், சிந்தனை யாவும் இறைவன் முன் ஒன்றித்து இருக்க வேண்டும். அனனியா, சப்பீரா இருவரும் கடவுளையே ஏமாற்றுகிறார்கள். விற்றுப்பெற்ற பணத்தில் ஒரு பகுதியை வீட்டிலே வைத்துவிட்டு பொய் கூறுகிறார்கள். எமது சொல், செயல், சிந்தனை யாவும் உண்மைத் தன்மையுடையாக இருக்க வேண்டுமென இறைவன் விரும்புகிறார்.

உள்ளத்தின் நிறைவிலிருந்தே வாய் பேசும், நல்லதோ தீயதோ எல்லாம் உள்ளத்திலிருந்தே வருகின்றன.

மேலும் இயேசு மக்கள் கூட்டத்தைத் தம்மிடம் வரவழைத்து அவர்களை நோக்கி, ''நான் சொல்வதைக் கேட்டுப் புரிந்து கொள்ளுங்கள். வாய்க்குள் செல்வது மனிதரைத் தீட்டுப்படுத்தாது; மாறாக வாயிலிருந்து வெளிவருவதே மனிதரைத் தீட்டுப்படுத்தும்'' என்றார்.

பேதுரு அவரை நோக்கி ''நீர் சொன்ன உவமையை எங்களுக்கு விளக்கும்'' என்று கேட்டார். இயேசு அவரிடம்'' உங்களுக்கு இன்னுமா புரியவில்லை? வாயினுள் செல்வது அனைத்தும் வயிற்றினூடே சென்று கழிப்பிடத்தில் வெளியேற்றப்படும் எனத் தெரியாதா? வாயினின்று வெளிவருபவை உள்ளத்திலிருந்து வருகின்றன. அவையே மனிதரைத் தீட்டுப்படுத்துகின்றன. ஏனெனில் கொலை, விபசாரம், பரத்தமை, களவு, பொய்ச்சான்று, பழிப்புரை ஆகியவற்றைச் செய்யத்தூண்டும் தீய எண்ணங்கள் உள்ளத்திலிருந்து வெளிவருகின்றன. இவையே மனிதரைத் தீட்டுப்படுத்துகின்றன. கை கழுவாமல் உண்ணுவது மனிதரைத் தீட்டுப்படுத்தாது'' என்றார்

மத்.15:10-11, 15-20

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி, உள்ளத்தில் இருந்தே எமது செயல்கள் உருப்பெறுகின்றன. நாம் எதைச் செய்கின்றோமோ எதைச் சிந்திக்கின்றோமோ எதைப் பேசுகின்றோமோ அவை எமது உள்ளத்தைப் பிரதிபலிக்கின்றன.

## செயற்பாடு

1. பின்வரும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்து கொள்வீர் என போஸ்டர் தயாரிக்கவும்
    - ♦ விருந்துபசாரத்தில்
    - ♦ வாகன விபத்து
    - ♦ ஆலயத் திருவிழா
    - ♦ இயற்கை அனர்த்தம்

2. மத்தேயு 15:10-20 குறிப்பிடுவதன் படி சட்டங்களை மட்டும் நிறைவேற்றுவதால் உளத்தூய்மை ஏற்படாது. மாறாக எமது தூய உள்ளம் தான் நற்செயல்களின் கருவூலம். இதன் அடிப்படையில் பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| சந்தர்ப்பம் | எனது செயற்பாடு |
|---|---|
| உ+ம் தவணைப் பரீட்சை | கடின முயற்சி எடுத்து கற்பேன் |
| 1. ஞாயிறு திருப்பலியில் பங்குபெறும் போது | |
| 2. திருவருகை / தவக்காலங்களில் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யும் போது | |
| 3. வகுப்பில் ஆசிரியர் இல்லாத போது | |
| 4. பஸ் வண்டியில் பயணம் செய்யும் போது | |
| 5. தாய் / தந்தை வீட்டில் இல்லாத போது | |

நாம் இறைவனின் பிள்ளைகளாக இருக்கிறோம். இறை உறவை வளர்ப்பதற்கு செபம் மிக முக்கியமானது. நற்செயல்கள் செய்வதற்கு செபத்தோடு தூய உள்ளமும் தேவையாகவுள்ளது. நல்லெண்ணம் உள்ளவர்கள் உயர்வடைவார்கள். தூய உள்ளத்தோடு நாம் கேட்கும்போது இறைவன் எல்லாவற்றையும் நமக்குத் தருவார்.

> உங்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படக் காரணமென்ன? உங்களுக்குள்ளே போராடிக் கொண்டிருக்கும் சிற்றின்ப நாட்டங்கள் அல்லவா? நீங்கள் ஆசைப்படுவது கிடைக்காததால் கொலை செய்கிறீர்கள்; பேராசை கொள்கிறீர்கள்; அதைப் பெற முடியாததால் சண்டை சச்சரவு உண்டாக்குகிறீர்கள். அதை நீங்கள் ஏன் பெற முடிவதில்லை? நீங்கள் கடவுளிடம் கேட்பதில்லை. நீங்கள் கேட்டாலும் ஏன் அடைவதில்லை? ஏனெனில் நீங்கள் தீய எண்ணத்தோடு கேட்கிறீர்கள் சிற்றின்ப நாட்டங்களை நிறைவேற்றவே கேட்கிறீர்கள்.
>
> யாக். 4:1-3


இலவச விநியோகத்திற்காக

## செயற்பாடு

யாக் 4:1-3 இன்படி, எமது உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பதற்கு நாம் தியாகம் செய்ய வேண்டிய குணங்களையும், வளர்க்க வேண்டிய குணங்களையும் அட்டவனையில் எழுதுங்கள்.


| தியாகம் செய்ய வேண்டிய குணங்கள் | வளர்க்க வேண்டிய குணங்கள் |
|---|---|
| | |
| | |
| | |

எமது சிந்தனையும் செயலும் எமது ஆளுமையின் வெளிப்பாடே ஆகும்.

நல்ல கனிகளை நாம் கொடுக்காத போது எமது அடிப்படைக் கிறிஸ்தவ அழைப்பிலிருந்து நாம் தவறுகிறோம். நல்ல பலன் கொடுக்காத மரங்களை இறைவன் விரும்புவதில்லை. நாம் நற்கனி கொடுப்பதைக் காண அவர் ஆவலாக காத்துக் கொண்டிருக்கிறார்.

> ‘‘கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை; நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். ஏனென்றால் முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிப்பாருமில்லை; முட்புதர்களில் திராட்சைக் குலைகளை அறுத்துச் சேர்ப்பாருமில்லை. நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்.
>
> லூக்.6:43-45

- நல்ல எண்ணங்களைக் கொண்டிருப்பவர்கள் எப்பொழுதும் நன்மையே செய்வார்கள். நல்ல சிந்தனை உள்ளவர்கள் எப்பொழுதும் இனிய சொற்களைப் பேசுவார்கள். சுயநலம் துறந்து, தூய உள்ளத்துடன் சமூகத்தில் வாழ வேண்டும்.




பிறரை மதித்து நடப்போம்
உரிமையை மதிப்போம்
பிறரை ஏமாற்றாதிருப்போம்
களவு செய்யாதிருப்போம்
பொய் சொல்லாதிருப்போம்

**செயற்பாடு :**

என்னில் தூய உள்ளம் இருக்குமாயின்,

- எனது நண்பனுக்கு தூய உள்ளத்துடன் உதவுவேன்.
- ................................................................................................
- ................................................................................................
- ................................................................................................
- ................................................................................................

> கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே;
> கடவுளே! நொறுங்கிய குற்றமுணர்ந்த உளத்தை நீர் அவமதிப்பதில்லை
>
> தி.பா. 51:17

தூய உள்ளத்தோராய் சமூகத்திற்கு மிகுந்த பணி செய்ய முடியும். இறைவனின் குரலுக்குச் செவிசாய்க்கின்றவரில் தூய உள்ளம் கட்டியெழுப்பப்படும். மனம் வருந்துவதன் வழியாக தீய உள்ளத்தை இல்லாமல் செய்ய முடியும்.

இறை அன்பின் வழியாக எமது செயல்களைத் தூய்மையாக்கி மனித மாண்பை வளப்படுத்த உறுதியான தீர்மானம் எடுப்போம்.

**செயற்பாடு :-**

1. தூய உள்ளத்தை இறைவன் உமக்கு வழங்கியுள்ளார் என்பதற்கு இறைவனுக்கு நன்றிச் செபம் ஒன்று எழுதுக.
2. சமூகத்தைத் தூய்மையாக்க உம்மால் செய்யக்கூடியவற்றை எழுதிக் காட்டுக.

**வாழ்க்கைக்கு**

கடவுளே தூயதோர் உள்ளத்தை
என்னுள்ளே படைத்தருளும்;
உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை
என்னுள்ளே உருவாக்கியருளும்.
(தி.பா. 51:10)